[1969 பிப்ரவரி 25

இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அப்படி மக்கள் தொகை ஐயாயிரமும், வருமானம் பத்தாயிரமும் இருந்தால் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றமாக மாற்றுவதற்கு ஊராட்சிகளே திர்மானம் போட்டு நிறைவேற்ற வேண்டுமா? அல்லது அரசாங்கமே நேரடியாக அதை பேரூராட்சி மன்றமாக மாற்றி அறிவிக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கமே பரிசீலனை செய்து தேவையான முடிவுகளை அறிவிக்கும்.

பதநீர் இறக்க உரிமம்

*51 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் வழங்கும் முறையை அறவே நீக்கிவிட வேண்டுமெனக் கோரி சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

*52 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, அதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள உரிமம் வழங்கும் முறையையே தொடர்ந்து கடைப்பிடிப்பது என்ற நிலையைத்தான் அரசாங்கம் எடுத்திருக்கிறது.

திரு. ரா. ராமச்சந்திரன் துரை : தலைவர் அவர்களே, பதநீர் இறக்குவதாகச் சொல்லி பனங் கள் இறக்குவது ஒன்று. அப்படி பதனீர் இறக்கியபிறகு நான்கு ஐந்து மணி நேரம் கழித்த பிறகு அது புளிப்பாகி விடுகிறது. அதைக் குடித்து வருகிற அப்பாவிகள் 4-எ செக்ஷன்படி, அதிக குடிபோதை என்கிற விதியின் படி அபராதம் கட்டுகிறார்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : குறைந்த குடிபோதைக்கு (not under the influence) 4-1(ஜெ) செக்ஷன்படி ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள். ஆகவே, இதை மாற்றியமைக்கும் பரிசீலனை அரசாங்கத்திற்கு உண்டா என்பது அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படிப்பட்ட சூழ்நிலையில் பதனீர் கெடுக்கப்பட்டு, அது கள்ளாக மாறி மதுவிலக்குத் திட்டத்திற்கே சவால் விடுகின்ற நிலைமை இருக்கிறது. இப்போது உரிமம் வழங்குகின்ற முறை, மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, it is a well-known fact that we are unable to restrict the drinking habits of those who are accustomed to liquors and very poor people are victimised in that connection. So, will the Government come forward to give permission to such poor people whenever they apply for licence?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது அப்படிப்பட்ட நடவடிக்கை எதையும் அரசு எடுப்பதாக இல்லை.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, ஐம்பது சதவிகிதம் போதை சத்துள்ள அரிஷ்டங்களை விற்பதற்கு அனுமதி முறை இல்லாமல் இருக்கும்போது ஒரு சதவிகிதம் போதையுள்ள பதனீர் இறக்குவதற்கான அனுமதிமுறையை வேண்டாமென்று சட்டம் விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிச் செய்வது மது விலக்குக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பாடான காரியமாக இருப்பதால் இப்போதுள்ள முறையே இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது பதனீர் இறக்குவதற்காக நாம் லைசென்ஸ் தருகிறோம். அதற்கான விண்ணப்பங்கள் தகுந்த நேரத்தில் போடப்பட்ட போதிலும் அனுமதி கிடைப்பதற்கு பல மாதங்களாகின்றன. அதன் காரணமாக பதனீர் இறக்கும் தொழில் பாதிக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? என்னுடைய தொகுதியிலுள்ள பெற்றபரமந்தார் என்ற ஊரிலிருந்து இவ் விஷயமாக மகஜர் வந்திருக்கிறதா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? (ஒரு மகஜரை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது கொடுக்காதீர்கள். பிறகு கொடுங்கள்.

திரு. கே. விநாயகம்: அந்த மகஜர் வரவில்லையென்றால் அதன் நகலை சபாநாயகர் மூலமாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உரிமம் வழங்குவதில் நபர்கள் உரிய நேரத்தில் பெறுவதற்கு முன்வருவதில்லை. பதனீர் இறக்கப்படாத காலங்களில் தொழில் நடத்துவதற்காக அவர்கள், வெளியூர்களுக்குச் சென்று விடுகிறார்கள். பிறகு வந்து வாங்கிக் கொள்வதற்கு காலதாமதம் ஆகின்றது. வழங்குவதில் குறைபாடுகள் எதுவும் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இறக்கும்படியான பதனீர் சில மணி நேரத்திற்குள் புளிப்பு ஏறி, கள்ளாக மாறிவிடுகிறது. கிராமங்களில் இப்படி கள்ளாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. காவல் துறையினர் இப்படி மாற்றுகிறவர்களை தீவிரமான சட்டத்தின் மூலம் தண்டிக்க இயலாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, பதனீர் இறக்குவதற்கான லைசென்ஸ் கொடுக்கும் முறையை அறவே ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் பதனீர் இறக்க வேண்டாமென்று சொல்லுகிறாரா அல்லது லைசென்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, போதை எது எதிலே எத்தனை சதவீதம் இருக்கிறது என்பதை கணக்குப் பார்த்தால், நாம சாப்பிடக்கூடிய அரிசி சாதத்தில்கூட 5 சதவீதம் போதை சத்து இருப்பதாகச் சொல்லப்படுவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? பதனீர் மட்டுமல்ல, எல்லாவற்றிலும் போதைச் சத்து இருக்கிறது. ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்து, மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அரிசி போதையே போதும் என்று கருதுகிறேன்.

Review of laws, rules, etc.

* 53. *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there are proposals under consideration of the Government to undertake systematic review of existing laws, rules, procedures, etc., with a view to streamline the administration; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாகத்தில் ஏற்படும் அவசர சந்தர்ப்பங்களுக்குத் தேவையானபோது தற்போதுள்ள சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் இவற்றை மறு ஆய்வுசெய்வது இயல்பான பணியாக மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுபற்றிச் சிறப்பு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker Sir, the persent Law Minister, the Hon. Thiru Madhavan, when he was an Opposition Member during the Congress regime had brought forward a private Member Bill providing for the disclosure of the wealth of the Ministers. Now the present Ministry has got ample opportunities to make that Bill into law and so may I request the Hon. Minister to state whether this Ministry has so far taken any steps